**அரசகரும மொழிகள் ஆணைக்குழு - 2023**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

அரசகரும மொழிகள் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் ஆணைக்குழுவின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழு உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.
- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக ஆணைக்குழுவின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது

அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மன்றத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது ஆணைக்குழுவின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 49 ஆம் பிரிவின் பிரகாரம் மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்களுக்கு உரித்தான சொத்து வகுப்பும் மீள்மதிப்பீடு செய்யவேண்டியிருந்த போதிலும் கிரயம் ரூபா 6,234,004 ஆன அலுவலக தளபாடங்களுக்கு இடையே ரூபா 70,000 ஆன அலுமாரி மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் மொத்த கிரயம் ரூபா 882,655 ஆன அலுவலக உபகரணங்களுக்கு இடையே ரூபா 8,850 ஆன இயந்திரம் மாத்திரம் கடந்த | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் முழுமையான பெறுமானத்தேய்வு செய்து தெரிவு செய்து பூர்த்தி செய்யப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்ற சொத்து வகுப்பு மீள்மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் 2024 இன் நிதிக்கூற்றுக்களில் அது சரிசெய்யப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆண்டில் மீள்மதிப்பீடு செய்தல் மீளாய்வாண்டின் போதும் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நிதிக்கூற்றுக்களில் சீராக்கப்பட்ட பெறுமானத்தீர்வு பெறுமதி ரூபா 3,994,537 ஆக இருந்த போதிலும் கணக்காய்வின் கணிப்பீட்டின் பிரகாரம் பெறுமான தேய்வு பெறுமதி 3,306,501 ஆனமையால் நிதிக்கூற்றுக்களில் பெறுமானத் தேய்வு ரூபா 688,036 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு மொத்த கிரயம் ரூபா 2,500,600 ஆன கணனியின் பெறுமதி முழுமையாக பெறுமானம் செய்யப்பட்டிருந்த ரூபா 1,376,850 ஆன கணனியின் பெறுமதி அகற்றப்பட்டு பெறுமானத் தேய்வு கணிப்பிடுவதற்கு பதிலாக அப்பெறுமதி சேர்க்கப்பட்டு பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டதன் காரணமாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணனிகளின் திரண்ட பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 3,085,245 ஆக இருந்ததுடன் கிரயம் ரூபா 2,500,600 ஆனமையால் கணணிகளின் பெறுமதி மறை பெறுமதி ஒன்றாக அவதானிக்கப்பட்டது. | ஆண்டிற்குரிய கணனி பெறுமானத் தேய்வு கணிப்பிடும் போது ஏற்பட்ட தவறினால் ரூபா 688,425.00 இனால் அதிகரித்திருந்ததுடன் அது 2024 இன் நிதிக்கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக பெறுமானத் தேய்வு கணிப்பிடல் வேண்டும். |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் கொடுப்பனவுச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடுகளை ஒப்பிடும் போது கணிப்பீடு செய்ய முடியாத தொலைபேசி படிகள், மொழி படிகள் மற்றும் நிறைவேற்று படிகளை உள்ளடக்கி கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் நிரந்த ஊழியர் மூன்று பேர்களுக்காக பணிக்கொடை ஒதுக்கீடுகள் | 2024 இன் நிதிக்கூற்றுக்களின் மூலம் குறைவாக கணிப்பிடப்பட்ட ரூபா 182,345.00 இனை சரிசெய்வதற்கும் எதிர்காலத்தில் பணிக்கொடை கணிப்பிடல் சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடுகள் கணிப்பிடுமாறும் உரிய உத்தியோகத்தர்களுக்கு | சட்டத்தின் பிரகாரம் பணிக்கொடைகள் சரியாக கணிப்பிடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அது அதிகரித்தும் குறைத்தும் ஒதுக்கப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது பணிக்கொடை ஒதுக்கீடுகள் ரூபா 182,345 தொகை குறைத்து மேற்கொள்ளப்பட்டிருந்தது. | ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (இ) | மீளாய்வாண்டின் தேசிய மொழி சமத்துவத்தை ஊக்குவிக்கும் செயற்திட்டத்திலிருந்து கிடைத்த 15 சொத்து விடயங்கள் மற்றும் புத்தாக்க நிலையத்தில் இருந்து கிடைத்த 05 டெப் கணனிகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அந்த விடயங்கள் நன்கொடையாக கிடைத்திருந்ததுடன் தற்போது அந்த சொத்துக்கள் நன்கொடை பதிவேட்டிலும், பொருட் பதிவேட்டிலும் மற்றும் நிலையான சொத்து பதிவேட்டிலும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் மதிப்பீட்டு பெறுமதி கிடைத்த பின்னர் 2024 இன் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| **அதிகார பலம் இன்றிய கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரம்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மூலதன செலவினத்திற்காக பொது திறைசேரியில் இருந்து கிடைத்த நிதியில் ரூபா 832,846 மீண்டெழும் செலவினத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | இந்த ஆணைக்குழு அரசாங்கத்தின் நியதிச்சட்ட நிறுவனமாக இருந்தமையால் திறைசேரியில் இருந்து கிடைக்கின்ற நிதி சேமித்தல் ஆண்டின் இறுதியில் மீண்டும் திறைசேரிக்கு அனுப்ப முடியாது இருந்தமையை குறிப்பிடுகின்றோம். அதனால் அந்த நிதி ஏனைய அத்தியாவசிய மீண்டெழும் செலவினத்திற்காக பயன்படுத்தி கட்டுநிதி முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது. | மூலதன செலவினங்கள் மீண்டெழும் செலவினத்திற்காக ஈடுபடுத்தாதிருத்தல் வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1991 இன் 18 ஆம் இலக்க அரச கரும மொழிகள் ஆணைக்குழுச் சட்டத்தின் 13(3) ஆம் பிரிவு | தலைவர் ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக இருந்த போதிலும் அவர் ஆணைக்குழுவின் பதவியணியினரின் அங்கத்தவர் ஆக இருக்க முடியாதிருந்த போதிலும் 2023 மார்ச் 13 ஆந் திகதி முதல் 2023 ஒக்டோபர் 26 ஆந் திகதி வரை ஆணைக்குழுவின் சகல கொடுப்பனவுகளுக்காகவும் செலவினங்களை உறுதிப்படுத்தல் தலைவரால் மேற்கொள்ளப் பட்டிருந்தது. | ஆணைக்குழுவினால் சட்டத்தின் 13.1 தொடர்பாக எங்களால் அதிக கவனம் செலுத்தி ஆணைக்குழுவின் சகல கொடுப்பனவுகளுக்காகவும் உரிய பணிகளுக்கு இடையூறு ஏற்படுவதை தடுக்கும் எமது பொறுப்பின் கீழ் மேற்கூறப்பட்ட வகையில் பணி நடைமுறைகள் வழு ஏற்பட்டிருந்தது. | சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2022 ஏப்ரல் 26 ஆந் திகதி இலக்கம் 3/2022 தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை | தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க அலுவலகங்களுக்காக கட்டிடங்கள் வாடகைக்குப் பெறல் நிறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவினால் வருடாந்தம் ரூபா 7,284,000 வாடகையில் அலுவலக கட்டிடம் வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. | பதவியணியினர் குறையும் போது மீண்டும் ஆணைக்குழு வேறொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுதல் பொருளாதார ரீதியில் நலனாக இல்லாதிருந்ததுடன் இதற்கு காரணமாக அலுவலகம் தயாரிப்பதற்காக (அலுவலகங்களை பிரிப்பதற்காக) தற்போதும் ஆணைக்குழுவின் நிதியேற்பாடு செலவிடப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 5,218,396 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 9,548,362 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,329,966 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்புக்கு மீண்டெழும் மானியம் ரூபா 6,505,000 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த ஆண்டில் செலுத்தப்படாத ரூபா 1,563,402 ஆன கட்டிட பராமரிப்பு செலவினத்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்ற நிதியேற்பாடு போதியளவில் இல்லாதிருந்தமையை தெரிவிப்பதுடன் வழங்கப்பட்டுள்ள நிதியேற்பாடுகளில் அந்த தொகை பகுதியாக செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய செலவினங்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் பிரதான செயற்பாடு அரசகரும மொழிகள் கொள்கையை அமுல்படுத்துதல் தொடர்பான விமர்சனங்கள், மேற்பார்வை, கல்வி மற்றும் ஆலோசனை மூலம் மக்களின் மொழித் தேவையினை வழங்குவதாக இருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் அந்த பதவிகளுக்கு உரிய உத்தியோகத்தர் பதவியான மொழி உத்தியோகத்தர், மொழி மேம்படுத்தல் மற்றும் ஆய்வு உத்தியோகத்தா என்ற பதவிகளில் முறையே 02, 07, 03 வெற்றிடங்கள் காணப்பட்டது. | இது தொடர்பாக 2024.03.13 ஆந் திகதி அரச நிர்வாக உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் மேலதிக செயலாளருடன் (நிர்வாகம்) கலந்துரையாடப்பட்டது. அதன் போது கிடைக்க பெற்ற ஆலோசனையின் பிரகாரம் ஆட்சேர்ப்பதற்கு தேவையான பதவிகளுக்காக தேவையான ஆணைக்குழு பத்திரம் ஒன்று 2024.03.19 ஆந் திகதி ஆணைக்குழு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தைப் பெற்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெறுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | அத்தியாவசிய பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்துவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |